புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# முத்துலட்சுமி ராகவன் புதினத்தில் மனித உறவுகளின் நிலைப்பாடுகள்

பொ.தன லெட்சுமி M.A., M.Ed., M.Phill.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நந்தா கலை அறிவியல் கல்லூரி
ஈரோடு - 52

முனைவர்.ஆ.இராமசந்திரன்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
நந்தா கலை அறிவியல் கல்லூரி
ஈரோடு - 52

ஆய்வுச்சுருக்கம்

மனித உறவுகள் என்றுமே மகத்தானது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் இச்சமூக வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமாக வாழ்கின்றனர். அப்படி வாழும் வாழ்க்கையில் நிலையான மனநிலையில் வாழ்பவர்கள் யாரும் இல்லை. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப மனிதனின் வாழ்க்கை முறை அமைகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் உறவுகளின் அன்பு பணத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. பணம் மட்டும் வாழ்க்கை இல்லை. அதையும் தாண்டி அன்பு, பாசம், அரவணைப்பு, காதல், குடும்பம், உறவு, நட்பு என பல உன்னதங்கள் உள்ளன என்பதையே இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

திறவுச் சொற்கள்

முன்னுரை
கதைக்கரு
தாய் - மகள் உறவு நிலைப்பாடு
நட்பு நிலைப்பாடு
உதவிக்கரம் நீட்டுபவரின் நிலைப்பாடு
காதலன் காதலி நிலைப்பாடு
நிறைவாக

## முன்னுரை

இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மற்றொரு மனிதனைச் சார்ந்துதான் வாழ்கிறான். இவ்வாறு ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் உறவு நிலை கொண்ட இவ்வுலகத்தின் மனித இனம் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள உறவுகள் முக்கியமானதும், முதன்மையானதும் ஆகும். மனித இனம் தனக்குள்ளாக ஏற்படுத்திக் கொண்டுள்ள பல்வேறு உறவுநிலைகள் நட்பு, காதல், பாசம், மரியாதை, பக்தி எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக உள்ளன. எனவே மனித உறவு என்பது, மனிதனைச் செம்மைப்படுத்த, மனித இனத்தை மேன்மைப்படுத்த மிகவும் இன்றியமையாததாகும்.

## கதைக்கரு

‘எனக்கென்று ஒரு இதயம்’ என்ற நாவலில் சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வினை மிக அழகாக கூறியிருக்கிறார். குடும்பம், காதல், அன்பு இவையனைத்தும் கலந்த கதம்பமாக அழகாக சித்தரித்து இருக்கிறார். இந்நாவலின் ஆசிரியர் ‘முத்துலட்சுமி ராகவன்’.

*தாய் - மகள் உறவு நிலைப்பாடு*

*தாய் என்ற உறவானது உலகத்திலேயே முதன்மையான உறவாகும். ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' என்ற சான்றோரின் வாய்மொழிக்கேற்ப தாய் என்பவர் தன் பிள்ளைகளிடம் காட்டும் அன்பானது என்றும் நிலைபெற்று உள்ள அன்பாகும். குடிகார தகப்பனால் வருந்தும் குழந்தைகளை அரவணைப்பது மட்டுமல்லாமல் நன்றாக படிக்கும் தனது மகளுக்காக கணவருடன் சண்டையிட்டு படிக்க வைப்பதும் அவள்தான். படிக்க வசதியில்லாமல் வருந்தும் சமயத்தில் தலைமையாசிரியரின் முயற்சியால் பஞ்சாயத்து தலைவரால் கல்விக்கான உதவி கிடைக்க பெறும் போது அதனை தடுத்த தனது கணவரிடம்,*

> *''ஆமாய்யா... நான் பிச்சைதான் எடுக்கிறேன். என் மகளுக்கு படிப்பை பிச்சை போடுங்கன்னு அவங்க கிட்ட கேட்கிறேன். லட்சம் லட்சமாய் கொட்டிக் கொடுத்தாலும் அறிவு வந்துவிடாதுய்யா.. அது தானாய் வரவேண்டும். என் மகள் கிட்ட சரஸ்வதி குடியிருக்கிறாள். தரித்திரம் தாண்டவமாடும் வீட்டில் என் செல்லக்கிளி பிறந்துவிட்டாளே. அதுதான் மகாலட்சுமி வாசம் செய்யும் மனையில் போய் யாசகம் கேட்டேன். என் மகளுக்கு படிப்பைக் கொடும்மான்னு கேட்டேன். அது தப்பா?''*

*என்று கணவனிடம் வாதாடி தன் மகளை படிக்க வைக்கும் அன்புதான் அவளுடையது.*

*படிக்க வைப்பதாக கூறிய பெரியவர்கள் இறந்த பின் அவர்களது மகன் சந்தானகிருஷ்ணன்; படிக்க வைப்பதாக சொல்லும் போது அதனை மறுத்த பூர்ணிமாவை படிக்க சம்மதிக்க வைத்து அவளது கனவை நனவாக்கியதும் அந்த தாயின் அன்புதான்.*

*பெற்றால் மட்டும் தான் பிள்ளையில்லை, பாசம் வைத்தாலும் அந்த தாயின் அன்புக்கு நிகரானது எதுவுமில்லை. அம்மா என்பது பாசத்தைக் குறிப்பிடும் சொல். அதுவே, வீட்டு எஜமானியை அழைக்கும் சொல்லாகவும், பெரியவர்களை மரியாதையுமன் விளிக்கும் சொல்லாகவும் இருந்தது. 'அம்மா' என்று அழைக்கும் குரலைக் கேட்க தவமிருந்த தாயம்மாவை அம்மா என்று பாசத்துடன் பூர்ணிமா அழைத்தவுடன் அவளுக்கு நிஜமான தாயாகவே மாறியவள் தாயம்மா.*

*பூர்ணிமாவுக்கு சந்தியாவால் பிரச்சனைகள் வரும் போதெல்லாம் பெற்ற தாயாகவே அருகில் இருந்து அரவணைத்தவள் தாயம்மாள் என்கின்ற தாய். கல்லூரியிலிருந்து வார இறுதியில் வீட்டிற்கு வரும் போதெல்லாம் தனது மகளின் வருகைக்காக காத்திருக்கும் தாயாகவே மாறிப்போனாள் அந்த பேதை. தான் பெறாத மகள் தன்னை விட்டு சொல்லாமல் போய்விட்டாள் என்பதை அறிந்ததும் அவளை தன்னிடம் அழைத்து வந்து சேர்க்க வேண்டும் என்று தன் அண்ணன் மகனிடம் வேண்டுதல் வைக்கும் அன்புதான் அந்த தாயம்மாவின் தாயன்பு.*

> *''அடி முடி தேடினாலும்*
> *அகராதியைப் புரட்டினாலும்*
> *முழுமையான அர்த்தம்*
> *அறிய முடியாத உயிர்ச் சித்திரம்*
> *அம்மா'' - வலைத்தளம்*

*அம்மாவின் அன்பு தூய்மையானது, தாயின் அன்பிற்கு நிகரான உண்மையான பாசம் இந்த உலகத்தில் இல்லை என்பதை தெளிவாக எடுத்துரைத்தார் முத்துலட்சுமி இராகவன்.*

*நட்பு நிலைப்பாடு*

*நட்பு, தோழமை, சினேகம் என்பது இருவரிடையே அல்லது பலரிடையே ஏற்படும் ஓர் உன்னத உறவாகும். வயது, மொழி, இனம், நாடு என எந்த எல்லைகளும் இன்றி புரிந்து கொள்ளுதலையும் அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது. நண்பர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வார்கள். நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக நடந்து கொள்வார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் தானாகவே முன்வந்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.*

> *''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
> *அகநக நட்பது நட்பு.'' (திருக்குறள் - நட்பு - 786)*

ஒரு உண்மையான நண்பனாக இருப்பவர் தவறுகளை எடுத்துக் கூறும் துணிச்சலுடனும் அன்புடனும் இருப்பார். அதுதான் நல்ல நட்புறவு. அந்த நல்ல நட்புறவாக வருபவள் தான் கீதா. தனது அறையில் தங்கும் ஒரு பெண்ணாக எண்ணிய பூர்ணிமாவின் வெளிப்படையான பேச்சும் இயல்பான தன்மையினாலும் ஈர்க்கப்பட்டு அவளுடன் நட்புறவாடும் கீதா எல்லா சூழ்நிலைகளிலும் பூர்ணிமாவிற்கு பக்க பலமாகவே இருக்கிறாள். யாரிடமும் மனம் விட்டு பேசாத பூர்ணிமாவின் இதயத்தைத் திறக்கும் சாவியாக கீதாவின் நட்பு இருந்தது. கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்த பூர்ணிமாவிற்கு எல்லாமாக மாறி அவளை வழிநடத்தும் சாரதியாக செயல்பட்டது கீதாவின் நட்பு. தனது மனக்குமுறல்களை எல்லாம் கொட்டித் தீர்க்கும் கர்ப்பகிரக தெய்வமாகவே கீதாவின் நட்பை எண்ணினாள் பூர்ணிமா.

பூர்ணிமாவிற்கு சந்தானகிருஷ்ணன் மேல் இருக்கும் காதலை கண்டறிந்தவள் கீதா. அந்த காதலும் பூர்ணிமாவினாலே அழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிந்ததும் பூர்ணிமாவை விட அதிகம் கவலைபட்டவள் கீதா. தன்னால் தன் தோழிக்கு ஏதாவது உதவி செய் முடியுமா என்று எண்ணி ஏங்கியவள் அதற்கான வாய்ப்பு கிடைத்ததும் தனது தோழியின் மனதை சந்தானகிருஷ்ணனிடம் அழகாக எடுத்துக்காட்டியவள் கீதா.

> “அவள் பைத்தியம் சார்... உங்கள் மனதில் சந்தியாவின் கல்யாணம் தடைபட்டுக் கொண்டிருப்பது குறித்த கவலை இருப்பதைத் தெரிந்து கொண்டதும் அம்மணி... திட்டம் போட்டு காரியத்தில் இறங்கி விட்டாள்.”

தன் தோழி செய்த செயலால் அவளது வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட போதும் அவள் மனம் வருந்திய நிலையினை எடுத்துரைத்தும் அவளது தற்போதைய நிலைபாட்டிற்கான காரணத்தையும் எடுத்துரைத்தாள்.

> “எங்கே உங்கள் வீட்டிற்கு வந்தால் தன்னையுமறியாமல் உங்களிடம் காதலைச் சொல்லிவிடுவோமோ என்ற பயத்துடன் உங்களைப் பார்ப்பதை தவிர்த்தாள். இப்போது சொல்லாமல் போய்விட்டாள் சுயநலக்காரி... காரியம் முடிந்ததும் காற்றாய் பறந்துவிட்டாள் என்று நீங்கள் நினைத்துக் கொள்வீங்க இல்லையா... அதற்காகவே ஓடிப் போய்விட்டாள். ஆனால், ஒன்றை மட்டும் அவள் என்னிடம் உறுதியாகச் சொன்னாள் சார்... காலம் பூராவும் அவர் நினைவில் நான் வாழ்ந்து விடுவேன் என்றாள்...”

என்று தன் தோழியின் மனநிலையை எடுத்துரைத்து அவளது மனசாட்சியாகவே வந்தவள் கீதா என்னும் நட்புறவு.

உதவிக்கரம் நீட்டுபவரின் நிலைப்பாடு

ஒருவருக்கு நாம் செய்யும் உதவியானது அவரது வாழ்க்கையை உயர்த்தும் தன்மை கொண்டதாக அமைய வேண்டும். இன்னாருக்கு இன்ன வேண்டும் என்பதை அவர்கள் கூறாமலே அதனை அறிந்து அவர்களுக்கு உதவுவது தான் சிறந்தது. தன்னிடம் படிக்கும் சிறந்த மாணவி வறுமையின் காரணமாக படிக்க முடியாமல் தவிப்பதை உணர்ந்த தலைமையாசிரியை சகுந்தலா பூர்ணிமாவின் தாயிடம் பேசிப்பார்க்கிறாள். அதற்கு கனகம்

> “மானமா துணிக்கட்டி, வயிற்றுக்கு இரண்டு வேளை கஞ்சி குடிக்கிறதே பெரிய பாடாய் இருக்கிறபோது, நான் இதுக்கெல்லாம் எங்கே போவேன் தாயி. ஏழைக்கேத்த எள்ளுருண்டையாய் என் பெண்ணுக்கு எட்டாம் கிளாஸ் வரை படிப்பு கிடைத்திருப்பதே போதும். இதுக்கு மேலே நான் ஆசைப்பட்டா அது பேராசை அம்மா.”

என்று தன் மனவேதனையை சொல்லிய போது ஏதும் பேச முடியாமல் சென்ற சகுந்தலா தான் இந்த ஊரிலிருந்து மாறுதலாகிப் போவதற்கு முன்னால் நான்றாகப் படிக்கும் பூர்ணிமாவிற்கு கண்டிப்பாக ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்.

> கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
> என்னாற்றுங் கொல்லோ உலகு (திருக்குறள் - ஒப்புரவு அறிதல் -211)

என்ற குறளுக்கு ஏற்ப கைமாறு கருதாமல் உதவும் அந்த ஊரின் பண்ணையார் ராமலிங்கத்தைச் சென்று பார்க்கிறார். தன்னிடம் ஏதோ ஒரு உதவியை நாடி தான் வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட பண்ணையார் என்னவென்று வினவ,

> “ஐயா, ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கு சமமானது ஆங்கோர் ஏழைக்குப் படிப்பை அளித்தல் என்று பெரியவங்க சொல்லியிருப்பதை கேள்விப்பட்டிருப்பீங்க. நம்ம ஊரில் படிப்பில் கெட்டிக்காரப் பெண் குழந்தையொன்று மேலே படிக்க வசதியல்லாததால்,

அதன் படிப்பு நிற்கப்போகிறது. நீங்கள் மனது வைத்து கைகொடுத்தால், அந்தக் குழந்தை ஆசைப்பட்ட படிப்பை படித்துவிடும்''

என்று பூர்ணிமாவிற்காக யாசகம் கேட்கிறார் தலைமையாசிரியர். தலைமையாசிரியையின் கோரிக்கையை உணர்ந்து கொண்டாலும் தான் ஒருவருக்கு வாக்குக் கொடுத்தால் அதனை கடைசிவரை காப்பாற்ற வேண்டும் என்பதால் அது சாத்தியமானதா என எண்ணும் போதே,

''பாவம்.. இல்லாதவர்கள். அந்தப் பெண் பிள்ளைக்கு உதவி செய்தால் நாம் ஒன்றும் குறைந்து விட மாட்டோம். அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்ததாக இருக்கட்டும். ஒப்புக்கொள்ளுங்கள்.''

என்று பண்ணையாரின் மனைவி பரிமளம் தனது கணவரிடம் சிபாரிசு செய்கிறார்.

''அதுசரி பரிமளம். நன்கொடைன்னு கேட்டால் ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளலாம். இது அப்படியில்லை. அந்தப் பெண்ணின் படிப்பு முடியுமட்டும் நாம் உதவி செய்ய வேண்டும். இடையில் நிறுத்திவிடக்கூடாது. அது பெரிய பாவம். ஒன்று நம்மால் முடியாதுன்னு சொல்லிவிடணும். இல்லைன்னா கடைசிவரைக்கும் கை கொடுத்து அந்தப் பெண்ணைக் கரையேத்தி விடணும்.''

என்று பண்ணையார் கூறினாலும், பூர்ணிமாவின் பொறுப்பை முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறார். தான் ஏற்றப் பொறுப்பை சரியாக பூர்த்தி செய்ய நினைத்தாலும் இறைவன் விளையாட்டால் பொறுப்பேற்ற இருவரும் இறந்துவிட்டனர். ஆனால், பொறுப்பு இறக்கவில்லை என்பதை நிலைநாட்டும் விதமாக தனது சொத்தை தனது குழந்தைகளுக்கு பிரித்துக் கொடுத்தது போல் பூர்ணிமாவின் படிப்பையும் தனது மகனுக்கு பிரித்துக்கொடுத்து அவளது படிப்பிற்கான ஏற்பாட்டினையும் அந்தநீதிமான் செய்துவிட்டார்.

தனது பெற்றோரின் சொத்துக்கு மட்டும் தான் உரிமையானவன் அல்ல அவரது பொறுப்புகளுக்கும் தான் என்பதை உணர்ந்து கொண்ட பண்ணையாரின் மகன் சந்தான கிருஷ்ணன் தன் தந்தையின் ஆசைப்படி பூர்ணிமாவைப் படிக்க வைக்கிறார்.

''அம்மாவும்... அப்பாவும்...அவர்களுடைய கடைசி நிமிடத்தில் என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்ட வாக்குறுதி, உன்னை மேலே படிக்க வைக்க வேண்டும் என்பது தான். இந்த ஊருக்கு முன்னிலையில் என் அப்பா உன்னை படிக்க வைப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார். பாதியில் அவர் போனாலும் அவர் விட்டுச் சென்றதை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நான் உன்னைப் படிக்க வைக்கிறேன்.''

என்று வாக்குக் கொடுத்து சென்னை அழைத்துச் சென்று படிக்க வைக்கும் போதும், வீட்டில் தன் தங்கையால் பூர்ணிமா அவமானப்படும் போதெல்லாம் நல்ல பாதுகாவலனாக அவளை காக்கவும் தவறவில்லை. மேலும், தன் தங்கையால் தன் தந்தைக்கு தான் செய்து கொடுத்த வாக்குக் காப்பாற்றப்படாமல் போய்விடுமோ என்ற எண்ணத்தில் பூர்ணிமாவிடம்,

''யார் என்ன சொன்னாலும் என் அனுமதி இல்லாமல் நீ உன் படிப்பை பாதியில் விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பிப் போக நினைக்க கூடாது. என் கடமையை முழுதாக செய்ய விடவேண்டும்.''

என்று வாக்கு வாங்கி அவளது படிப்பு முடியும் வரை பார்த்துக் கொண்டார். இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் உதவிக்கரம் நீட்டி வாழும் வாழ்க்கையே மகத்தானது என்பதை தனது ஒவ்வொரு கதாபாத்திரங்களின் மூலம் எடுத்தியம்பியது சிறப்பே.

காதலன்-காதலி நிலைப்பாடு

காதல் இந்த உலகையே மாற்றிப்போடும் சக்திவாய்ந்தது. அழகானது, அற்புதமானது, உணர்வுபூர்வமானது. இந்த காதலுக்குத்தான் எத்தனை சக்தி இருக்கிறது. கொதித்த மனம் குளிர்வதும்... குளிர்ந்த மனம் கொதிப்பதும் காதலில் மட்டுமே சாத்தியமாகிறதே. இது எப்படி? ஆம் அந்த மாற்றத்தைத் தருவது காதல் மட்டுமே. காதலிப்பதை விட காதலிக்கப்படுவதே சுகமானது. எந்த சூழ்நிலையில் எப்படி காதல் வரும் என்பது தெரியாது. ஆனால், காதல் வந்துவிட்டால் தனது வாழ்க்கையே அர்த்தமுள்ளதாக மாறிவிடுவதுதான் இயல்பு. தனக்கும் தனது படிப்பிற்கும் பாதுகாவலனாக மரியாதைக்குரியவாக கருதப்பட்ட சந்தானகிருஷ்ணன் எப்போது தனது காதலனாக மாறினான் என்பது பூர்ணிமாவிற்கு தெரியாது. ஆனால், அவன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்து விட்டதுதான் அதிசயம். தன்னை அவமானம் மட்டுமே படுத்திக்கொண்டிருக்கும் சந்தியாவின்

*மீது கோபப்படாமல் தனது காதலனுக்காக சந்தியாவின் காதலைச் சேர்த்துவைக்க எண்ணுவதுதான் காதலின் மகத்துவம்.*

*உன்னிடம் நான்*
*முதலில் பேசியபோது*
*நினைக்கவில்லை*
*நீதான் என்னுடைய*
*உயிராகவும்... உறவாகவும்...*
*இருக்கப் போகிறாய் என்று...!!!*

*தனது காதலனின் தங்கை வாழ்க்கைச் சிறக்க தனது வாழ்க்கையை இழக்க தயாராக இருக்கும் பூர்ணிமாவின் காதல் அற்புதமானது. இணைந்து வாழ்வது மட்டும் காதல் இல்லை. தனது காதலனை நிம்மதியாக வாழ வைக்க அவனைப்பிரிந்து அவனது நினைவில் வாழ்வதும் காதல் தான் என்பதை நிரூபிக்கிறாள் பூர்ணிமா.*

*"நான் என் காதலை கொல்லவில்லை. அது சாகவும் விடமாட்டேன். நான் வாழும் காலம் வரைக்கும் என் மூச்சில் கலந்து நிற்கும்"*

*என்று காதலனைப் பிரிந்து வாழும் வாழ்க்கையும் அவனது நினைவுடனே இருக்கும் என்பதை அழகாக எடுத்துரைக்கிறாள்.*

*தன்னைக் காதலிக்கும் பெண் தனக்காகவே தன்னை விரும்ப வேண்டும் என்று எண்ணும் சந்தானகிருஷ்ணன்,*

*"அவளுக்கும் என்னைப் பிடித்திருக்க வேண்டும். என்னை எனக்காக காதலிக்க வேண்டும். என் பணம், வசதிகள் இவையெல்லாவற்றையும் மறந்து எனக்காக உருக வேண்டும். மொத்தத்தில் எனக்கென்று ஒரு இதயம் வேண்டும்."*

*என்று ஆசைப்படுகிறான். ஆனால், அவன் அறியாமலே அவனை ஒரு இதயம் அவனுக்காக துடித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்த பின்,*

*"எனக்கென்று ஒரு இதயம் இருக்குமா என்று தேடி அலைந்தேனே... இதோ... எனக்காகவே ஒருத்தி தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு தியாகியாய் என்னைத் துறந்து ஓடியிருக்கிறாள்." என்றதும், அவளைத் தேடி செல்லத் துடிக்கிறான். தனது வீட்டிற்கு அவள் தான் என்றுமே ஒளிவிளக்கு என்பதை புரிந்து கொள்கிறான். அவள் தன்னை விட்டு பிரிந்து செல்ல காரணம் என்ன என்பதை அறிந்த பின் அவளது காதல் மேல் அவனுக்குத் தீரா காதல் ஏற்படுகிறது. தனது அத்தையிடம்*

*"ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தி தன்னை அழித்துக்கொண்டு மற்றவர்களுக்கு ஒளி கொடுக்குமாம். அதைப் போல இவள் தன் காதலை அழித்துக்கொண்டு சந்தியாவின் வாழ்வைக் காப்பாற்ற சொல்லாமலே ஓடிவிட்டாள்"*

*என்று கூறி வருந்துகிறான். ஆனால், தன் காதலை ஒருபோதும் தோற்க விடுவதில்லை என்பதில் மிகவும் உறுதியாயிருந்தான். அதனால் தான் தன் காதலைத் தேடி உடனே புறப்பட்டான்.*

*"நான் போய் அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன் அத்தை. எனக்கு மனைவியாக.. உங்களுக்கு மகளாக... சந்தியாவிற்கு அண்ணியாக... அவள் என்றைக்கும் நம்மோடு இருப்பாள்." என்று கூறியவன் அவளை மனைவியாகவே அழைத்து தனது இல்லத்திற்கு வந்து விட்டான். உண்மையான காதல் பல சோதனைகளைச் சந்தித்தாலும் அது தோற்பதில்லை. என்றென்றும் நிலையாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கும்.*

*மனதில்*
*கிறுக்கியதை*
*அலை வந்து*
*அழித்தாலும்*
*நாம் மனதில்*
*கிறுக்கியது*
*மரணம் வரை அழியாது.. (வலைதளம்)*

*நமது உணர்வுகள் பலவிதமாக இருந்தாலும் வாழ்க்கையின் உயிரில் கலக்கும் ஒருவிதமான அதிசய உணர்வுதான் காதல்.*

நிறைவாக

மனிதர்களின் உறவு நிலைகளில் வேறுபாடுகள் தோன்றுவது இயல்பான ஒன்றாகும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறான கருத்துக்களையும், சிந்தனைகளையும், அனுபவங்களையும் வெளிப்படுத்துகிறான். இதற்கு காரணம் குடும்ப உறவுகள், நட்பு, காதல், போன்றவற்றை குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒருவருடைய நிலைப்பாடு மாறிக் கொண்டே இருக்கிறது. அவரவர் நிலையிலிருந்து பார்க்கும் போது அவரவர் செயல்களே சரியானதாக கருதப்படுகிறது. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப மனித வாழ்வின் மாற்றங்களே அவர்களை நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் நமக்குக் காட்டுகின்றது. அவரவர் விரும்பியது கிடைக்கும் போது நம்மைச் சுற்றி இருக்கும் உறவுகளும் நல்லவர்களாகவே கருதப்படுகின்றனர். சத்தியமும் வாக்குகளும் மனிதர்களின் வாழ்க்கை நிலைப்பாடுகளையே மாற்றி அமைத்துவிடுகின்றன. அந்த வாழ்க்கையையும் சிறப்பாக கொண்டு செல்வதிலேயே தான் மனித வாழ்வின் மகத்துவம் மறைந்து கிடக்கிறது என்பதை ''எனக்கென்று ஒரு இதயம்'' என்றும் புதினத்தில் முத்துலட்சுமி ராகவன் அற்புதமாக எடுத்தாண்டுள்ளார்.

********* ********* ********** ********* ********* ********** ********** **********